இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

ஆசிரியர் கல்வியில் முதுகலைமாணி நிகழ்ச்சித்திட்டம்

இறுதிப் பரீட்சை – 2008

**ESP 2262 –** ஆசிரியர் கல்வியில் முகாமைத்துவம்

காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

055

---

திகதி: 26.05.2008 நேரம்: மு.ப 9.30 – பி.ப 12..30

---

ஏதேனும் மூன்று(03) வினாக்களுக்கு மட்டும் விடை தருக..

01. (i) "நிறுவன கலாசாரம்" என்பதை "நிறுவன கவிநிலை"யிலிருந்து வேறுபடுத்துக. (08 புள்ளிகள்)

(ii) நிறுவன கலாசாரத்தை பகுப்பாய்வு செய்வதற்கு அடிப்படையான பண்புக்கூறுகளை உதாரணங்கள் தந்து விளக்குக. (12 புள்ளிகள்)

(iii) "முகாமைத்துவ தீர்மானம் மேற்கொள்ளல் என்பது நிறுவனத்தின் கலாசாரத்தினால் பாதிக்கப்படலாம்." தங்களது நிறவனத்தின் தற்போதைய கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்படி கூற்றினை பரிசீலிக்க. (13 புள்ளிகள்)

02. (i) (அ) தங்களது நிறுவனத்தில் அண்மையில் ஏற்பட்ட ஒரு மாற்றத்தினை சுருக்கமாக விபரிக்குக.

(ஆ) அம்மாற்றத்தை ஏற்படுத்திய தூண்டிகள் யாவை? (10 புள்ளிகள்)

(ii) எந்தவொரு நிறுவனத்திலும் சிலர் மாற்றங்களை வரவேற்பார்கள், சிலர் எதிர்ப்பார்கள். உங்களது நிறுவனத்திலிருந்து உதாரணங்களைத் தந்து எதிர்ப்புக்களை நீங்கள் எவ்வாறு சமாளிப்பீர்கள் என விளக்குக. (10 புள்ளிகள்)

(iii) பொருத்தமான மாற்ற மாதிரிகை ஒன்றினைப் பயன்படுத்தி நீங்கள் எவ்வாறு மாற்றங்களை விளைதிறனுடன் அறிமுகப்படுத்துவீர்கள் என்பதை உதாரணங்களுடன் விளக்குக. (13 புள்ளிகள்)

03. (i) இலங்கையில் ஆசிரிய கல்வி முறைமையின் கட்டமைப்பினை சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) ஆசிரியர் கல்வி தொடர்பான (அ) முகாமைத்துவ எழுவினாக்களும் (ஆ) சூழல்சார் எழுவினாக்களும் யாவை? உதாரணம் தந்து விளக்குக (10 புள்ளிகள்)

(iii) இந்த எழுவினாக்களுக்கு முகம் கொடுக்க அண்மையில் மேற்கொண்ட ஏற்பாடுகளை விமர்சனரீதியாக பகுப்பாய்வு செய்க. (13 புள்ளிகள்)

04. பின்வருவனற்றுள் எவையேனும் மூன்றினுக்கு மாத்திரம் சிறு குறிப்பு எழுதுக

(i) போதனா தலைமைத்துவம்
(ii) இலங்கையில் ஆசிரியர் செயலாற்றுகை தரக்கணிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டம்
(iii) பாடசாலை மட்ட அசிரியர் அபிவிருத்தி
(iv) தேசிய கல்வி நிறுவகத்தில் ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்
(v) வினைத்திறனும் விளைதிறனும்

(11 x 3 = 33 புள்ளிகள் )

05. (i) ஒரு முகாமையாளரையும் தலைவரையும் வேறுபடுத்துக. (06 புள்ளிகள்)

(ii) ஏதேனும் ஒரு தலைமைத்துவ கோட்பாட்டினைத் தெரிந்து அதனை தங்களது நிறுவனத் தலைமைத்துவத்தின் அடிப்படையில் விமர்சனரீதியாகப் பகுப்பாய்வு செய்க. (14 புள்ளிகள்)

(iii) தங்களது நிறுவனத்தின் விளைதிறனை இன்னும் மேம்படுத்துவதற்கு என்ன வகையான தலைமைத்துவ பாங்கினை விதந்துரைப்பீர்கள்? உதாரணங்கள் தந்து விளக்குக. (13 புள்ளிகள்)

06. (i) "கொள்கை" என்னும் எண்ணக்கருவை சுருக்கமாக விளக்குக (07 புள்ளிகள்)

(ii) 1943ஆம் ஆண்டு தொடக்கம் ஆசிரியர் கல்வி தொடர்பாக மேற் கொள்ளப்பட்ட கொள்கைத் தீர்மானங்களை விமர்சனரீதியாக பகுப்பாய்வு செய்க. (13 புள்ளிகள்)

(iv) 21ஆம் நூற்றாண்டின் மாறும் தேவைகளுக்கு விளைதிறனுடன் முகம் கொடுக்கத்தக்கதாக ஆசிரியர் கல்வியை உருவாக்க என்ன கொள்கைத் தெரிவுகளை நீங்கள் விதந்துரைப்பீர்கள்? (13 புள்ளிகள்)

(பதிப்புரிமையுடையது)